தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 08.11.2013

### ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு

வட கிழக்கு பருவ மழை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் வெள்ளிக்கிழமை (நவ.8) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடல் பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை நகர்ந்து வந்து குமரிக் கடல் அருகே கடந்த இரு நாள்களாக நிலை கொண்டிருந்தது. இதனால் டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்தது.

இந்நிலையில் வியாழக்கிழமையன்று காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவிழந்து விட்டதாக வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதைத் தவிர புதன்கிழமையன்று அரபிக் கடல் பகுதியில் புதிய குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இது ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையாக வலுப்பெற அதிக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக கேரளம் மற்றும் கர்நாடகத்தில் கனமழை பெய்யும் என்றும், தமிழகத்தில் மழை வாய்ப்பில்லை என்றும் வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வானிலை முன்னறிவிப்பு: இருப்பினும் வடகிழக்கு பருவமழை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் வெள்ளிக்கிழமையன்று மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

### கோமாரி நோய் தடுப்பு முகாம்

கால்நடைகளுக்கு ஏற்படும் கால் மற்றும் வாய் நோயைத் (கோமாரி) தடுக்கும் வழிமுறைகள் குறித்து வியாழக்கிழமை ஒருநாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

திருத்தணி கால்நடை உதவி கோட்ட அலுவலக வளாகத்தில், கால்நடைகளுக்கு ஏற்படும் கால் மற்றும் வாய் நோய்(கோமாரி) தடுப்பு மற்றும் சிகிச்சை அளிப்பது குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

திருத்தணி கால்நடைத் துறை உதவி இயக்குனர் மருத்துவர் செல்லத்துரை தலைமை வகித்தார்.

பயிற்சியில் திருத்தணி, ஆர்.கே.பேட்டை, திருவாலங்காடு, பள்ளிப்பட்டு ஆகிய ஒன்றியங்களில் உள்ள மருத்துவ அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

**காலாவதியான பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விற்றால் கடும் நடவடிக்கை: வேளாண்மை இணை இயக்குநர்**

ராமநாதபுரம் மாவட்டத்தில் உரிமம் பெற்ற தனியார் பூச்சி முருந்து விற்பனை செய்யும் நிறுவனங்களில் வேளாண்மை இணை இயக்குநர் தலைமையிலான கண்காணிப்புக் குழுவினர் புதன்கிழமை நேரில் ஆய்வு செய்தனர். மேலும் அவர்களிடம் காலாவதியான பூச்சி மருந்துகள் விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை ஆரம்பித்ததைத் தொடர்ந்து விவசாயப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. விவசாயிகளுக்கு தரமான பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கிட வேளாண்மைத்துறை மூலமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் மொத்தம் 50 உரிமம் பெற்ற பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் களைக் கொல்லிகள் தரமானதாக இருக்கிறதா என சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் உரிமம் பெற்றுத் தான் விற்பனை செய்கிறார்களா என கண்டறியும் பொருட்டு மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் வேளாண்மைத்துறை உயர் அதிகாரிகள் பலரும் இடம் பெற்றிருக்கின்றனர்.

இக்குழுவினர் புதன்கிழமை ராமநாதபுரம் வட்டாரத்தில் உள்ள ஒரு தனியார் பூச்சி மருந்துக் கடையினை இந்த மாவட்ட அளவிலான குழு நேரில் ஆய்வு செய்தது. ஆய்வின் போது வேளாண் துணை இயக்குநர்கள் எஸ்.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.சேக்அப்துல்லா, தரக்கட்டுப்பாட்டு பிரிவு உதவி இயக்குநர் ஆர்.ராமசாமிப் பாண்டியன் ஆகியோர் உடன் இருந்தனர். ஆய்வில்

விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும் பூச்சி மருந்துகள் காலாவதி நாளுக்குள் விற்கப்படுகிறதா என ஆய்வு செய்யப்பட்டது. பூச்சி மருந்து மற்றும் களைக்கொல்லியில் 121 மாதிரிகள் எடுத்து பூச்சி மருந்து ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்குப் பின்னர் வேளாண்மை இணை இயக்குநர் நா.வீ.கிருஷ்ணமூர்த்தி கூறுகையில் காலாவதியான பயிர் பாதுகாப்பு மருந்துகளை விவசாயிகளுக்கு எக்காரணத்தைக் கொண்டும் விற்பனை செய்யக் கூடாது. அவ்வாறு விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தனியார் மருந்துக் கடைகளில் மருந்துகளை ஒழுங்காக அடுக்கி வைத்திருக்க வேண்டும். இருப்பு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். கடையின் முகப்பில் முக்கியமாக விலைப்பட்டியல் வைத்திருப்பது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

**விவசாயிகள் உரத்தை கடனாகவும் பெறலாம்:அதிகாரி**

விவசாயிகள் தேவையான உரத்தை கடனாகவோ அல்லது ரொக்கத்திற்கோ பெற்றுக் கொள்ள கூட்டுறவுத்துறை ஏற்பாடு செய்திருப்பதாக அத்துறையின் மண்டல இணைப்பதிவாளர் ஆரோக்கிய சுகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக புதன்கிழமை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ராமநாதபுரம் மண்டலத்தில் பரமக்குடி, கமுதி, திருவாடானை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் 4696 மெ.டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவற்றில் யூரியா 1698 மெ.டன், டி.ஏ.பி.2121 மெ.டன், காம்ப்ளக்ஸ் உரம் 866 மெ.டன், பொட்டாஷ் 11 மெ.டன் இருப்பு உள்ளது. இது போதுமான அளவு ஆகும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் கடன் பெறும் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரத்தை கடனாகவும், கடன் கோராத விவசாயிகள் உரத்தை ரொக்கத்திற்கும் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான ஏற்பாட்டை கூட்டுறவுத்துறை செய்துள்ளது. விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நடவு முறையில் துவரை சாகுபடிக்கு மானியம்: ஆட்சியர் தகவல்**

சிவகங்கை மாவட்டத்தில் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நடவு முறையில் துவரை சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 800 கிலோ மகசூல் பெறலாம் என்றும், ஹெக்டேருக்கு ரூ.7,500 மானியமாக வழங்கப்படும் எனவும் மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

மாவட்டத்தில் பயறு வகை சாகுபடியை அதிகரிக்கும் வகையில் துவரை சாகுபடியில் விதைகளை நேரடியாக நிலத்தில் விதைக்காமல், நாற்றுகளாக வளர்த்து நடவு செய்யும் புதிய தொழில் நுட்பத்தை வேளாண் துறை செயல்படுத்தி வருகிறது. இதன்படி மாவட்டத்தில் 270 ஹெக்டேரில் துவரை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அதிக நாட்கள் வயதுடைய, உயர் விளைச்சல் தரும், மலட்டு தேமல் நோய் எதிர்ப்பு சக்தி உடைய கோ 7, எல்.ஆர்.ஜி.41 ரகங்களை சாகுபடி செய்யதால் ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை போதுமானது. 5 அங்குலத்திற்கு 4 அங்குள அளவுள்ள பாலிதீன் பைகளில் தொழுவுரம் மணல் கலந்த கலவையை நிரப்பி, பூஞ்சாள மருந்து மற்றும் ரைசோபியம் விதை நேர்த்தி செய்த விதைகளை பாலித்தீன் பைகளில் ஒரு பைக்கு 2 விதை விதைக்க வேண்டும். இதன்படி ஒரு ஏக்கருக்கு 2,500 பைகள் போதுமானது.

விதைத்த 25 முதல் 30 நாட்களுக்கு பூவாளியால் நீர் பாய்ச்சி நாற்றுகளை வளர்க்க வேண்டும். நடவு வயலினை நன்கு உழவு செய்து மண் மாதிரி ஆய்வின்படி அடியுரம், நுண்ணூட்ட உரங்கள் இட்டு 6 அடி இடைவெளியில் ஆழச்சால் செய்திட வேண்டும். ஆழச்சால் வரிசையில் 2 அடி இடைவெளியில் பாலித்தீன் பை நாற்றினை அரை அடி குழி நடவு செய்து 15 முதல் 20 நாள்களில் களை எடுத்து மண் அணைக்க வேண்டும். நல்ல நாற்றினை மட்டும் வைத்து விட்டு இரண்டாவது நாற்றினை அகற்ற வேண்டும். நடவு செய்த 20 மற்றும் 30ஆவது நாள்களில் நுனிக்குருத்தினை கிள்ளி விடுவதன் மூலம் பக்க கிளைகள் அதிகமாகத் தோன்றி பூங்கொத்துகள் அதிகரிக்கும்.

பூ பூக்கும் சமயம் 2 சதம் டி.ஏ.பி. கரைசல் தெளிக்க வேண்டும். பூக்கும் பருவம் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் நீர் பாய்ச்ச வேண்டும். வேளாண் துறை மூலம் துவரை நடவுக்கு சொட்டு நீர் பாசனம் மானியத்தில் வழங்கப்படுகிறது. துவரை பூக்கும் பருவத்தில் காய்ப்புழுவினைக் கட்டுப்படுத்த பூச்சி கொல்லி மருந்து தெளிக்கலாம்.

நடவு முறையில் துவரை சாகுபடி செய்வதன் மூலம் ஏக்கருக்கு 800 கிலோ மகசூல் பெறமுடியும். தற்போது பெய்து வரும் பருவமழையைப் பயன்படுத்தி துவரை நடவு செய்ய விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு பயனடைய வேண்டும் என ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**குறுவை சாகுபடி: முதல்முறையாக நெல் கொள்முதல் நிலையம் திறப்பு**

மதுரை மாவட்டத்தில் குறுவை சாகுபடிக்கென முதல் முறையாக நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படுகிறது. பல ஆண்டுகால கோரிக்கைக்கு தீர்வு கிடைத்துள்ளதற்கு விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பெரியாறு பாசனத் திட்டத்தில் மதுரை மாவட்டத்தில் குறுவை, சம்பா என இருபோகங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

வாடிப்பட்டி, மதுரை வடக்கு ஆகிய தாலுகாக்களை உள்ளடக்கிய இருபோக சாகுபடி பகுதியின் முதல்போகத்தில் 45 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்படும்.

சம்பா சாகுபடியைப் பொருத்தவரை இருபோக பகுதியையும் சேர்த்து, மாவட்டம் முழுவதும் ஏறத்தாழ ஒன்றரை லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படும். கடந்த ஆண்டில் பருவமழை போதிய அளவு இல்லாத காரணத்தால் குறுவை மற்றும் சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டது.

நிகழாண்டில், குறுவை சாகுபடிக்கு பெரியாறு - வைகை அணையில் இருந்து வழக்கத்தைக்காட்டிலும் சற்று தாமதமாகத் திறக்கப்பட்டாலும், போதிய அளவுக்குத் தண்ணீர் கிடைத்தது.

மேலும் பருவமழை துவங்கியதால் குறுவை சாகுபடி திருப்திகரமான நிலையில் இருக்கிறது.

மதுரை மாவட்டத்தில் சம்பா சாகுபடி நெல்லை கொள்முதல் செய்ய, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் நிலையங்கள் திறப்பது வழக்கம். குறுவை சாகுபடிக்கும் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என, இருபோக பகுதி விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இதுதொடர்பாக அண்மையில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியனிடம் கோரிக்கை அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து தற்போது குறுவை சாகுபடிக்கு முதல் முறையாக நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படுகிறது.

மதுரை வடக்கு தாலுகா குலமங்கலத்தில் முதலாவது கொள்முதல் மையத்தை வெள்ளிக்கிழமை திறக்க மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இருபோக பகுதியில் வழக்கமாக 45 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்படும்.

நிகழாண்டில், ஏறத்தாழ 25 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

இதில் குலமங்கலம் பகுதியில் இப்போது அறுவடை துவங்கியுள்ளதால், அங்கு கொள்முதல் நிலையம் திறக்கப்படுகிறது.

இருபோக பகுதியின் முதல்போக சாகுபடிக்கென கொள்முதல் நிலையம் திறப்பது இதுவே முதல் முறை என்று வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை கூறினார்.

நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் சன்ன ரகம் குவிண்டால் ரூ.1,410-க்கும் மற்ற ரகம் ரூ.1360-க்கும் கொள்முதல் செய்யப்படும். குலமங்கலத்தைத் தொடர்ந்து மேலும் 4 இடங்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

**ரூ.44 ஆயிரம் கோடி விவசாய விளைபொருள் வீண்**

முறையான பதப்படுத்தல் தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படாததால், இந்தியாவில் ஆண்டுக்கு ரூ.44 ஆயிரம் கோடி மதிப்பிலான விவசாய விளைபொருள்கள் வீணாகின்றன என்று மும்பை பாபா அணு ஆராய்ச்சி மைய உணவுப் பதப்படுத்தல் தொழில்நுட்பப் பிரிவு தலைவர் ஏ.கே.சர்மா கூறினார்.

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம், தமிழ்நாடு உணவுப் பொருள் வணிக வளாகம் ஆகியன இணைந்து மதுரையில் வியாழக்கிழமை நடத்திய, கதிர்வீச்சு தொழில்நுட்பத்தில் உணவுப் பொருள்களைப் பதப்படுத்தல் குறித்த கருத்தரங்கில் அவர் பேசியது:

விவசாய விளைபொருள்களைப் பொருத்தவரை குறிப்பாக காய்கறிகள், பழங்கள், தானியங்கள் ஆகியன சேமிப்புக் கிடங்குகளில் முறையாக பதப்படுத்தப்படாமல் வீணாகிவிடுகின்றன. உற்பத்தியாகும் விவசாய விளைபொருள்களில் ஆண்டுக்கு 20 சதவீதத்தில் இருந்து 40 சதவீதம் வரை அதாவது ரூ.44 ஆயிரம் கோடிக்கு வீணாகிவிடுகிறது. இந்தியா போன்ற வளரும் நாட்டுக்கு இது பெரும் பிரச்னையாக இருந்து வருகிறது.

உணவுப் பொருள் பதப்படுத்தலுக்கு ஏராளமான தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படுகின்றன. இருப்பினும், கதிர்வீச்சு தொழில்நுட்பம் உலகளவில் பல்வேறு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நடைமுறையில் இருக்கும் சில பதப்படுத்தல் தொழில்நுட்பங்களில் ரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்படுவதால் ஏற்றுமதியில் பிரச்னை ஏற்படுகிறது.

இந்த கதிர்வீச்சு தொழில்நுட்பத்தில் காய்கறிகள் குறிப்பாக உருளைக்கிழங்கு, வெள்ளைப் பூண்டு, இஞ்சி, பழ வகைகள், கடல் உணவுப் பொருள்கள், இறைச்சி போன்றவற்றை நீண்ட நாள்களுக்குக் கெடாமல் பாதுகாக்க முடியும். இந்த தொழில்நுட்பத்தில் பூச்சிகள், நுண்ணுயிரிகள், கிருமிகள் மட்டுமே அழிக்கப்படுகின்றன. உணவுப் பொருள்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

இதேபோல, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ரோஜா, மல்லிகை, அலங்கார மலர்கள், கொய் மலர்கள் போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவை மொட்டுப் பருவத்தில் இருக்கும்போது தான் ஏற்றுமதி செய்ய முடியும். அதேநிலையில் பதப்படுத்தி வைப்பது மலர் விவசாயிகளுக்கு சவாலாக இருந்து வருகிறது.

கதிரியக்கத் தொழில்நுட்பத்தில் மலர்களை மொட்டு நிலையிலேயே பதப்படுத்தி வைப்பது சாத்தியமாகிறது என்றார்.

பாபா அணு ஆராய்ச்சி மைய சென்னை மண்டல மையத்தின் முதுநிலை விஞ்ஞானி ஜே.டேனியல், தொழில் வர்த்தக சங்க முதுநிலைத் தலைவர் எஸ்.ரத்தினவேலு, தலைவர் என்.ஜெகதீசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தென்னை விவசாயம் பாதிப்பு: நிவாரணம் வழங்க கோரிக்கை**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகாவில் வறட்சியால் தென்னை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாடிப்பட்டி தாலுகாவில் வாடிப்பட்டி, கச்சைகட்டி, குட்லாடம்பட்டி, செம்மணிப்பட்டி, விராலிப்பட்டி, ராமமையன்பட்டி, பூச்சம்பட்டி, சொக்கலிங்கபுரம், ஆண்டிபட்டி, கட்டக்குளம், மேட்டுநீரேத்தான், சின்னமநாயக்கன்பட்டி, தும்பிச்சம்பட்டி, நீரேத்தான், தாதம்பட்டி, போடிநாயக்கன்பட்டி, ராமநாயக்கன்பட்டி, குலசேகரன்கோட்டை உள்பட பல பகுதிகளில் தென்னை விவசாயம் நடந்து வருகிறது. பெரும்பாலும் கிணற்றுப்பாசனம் மூலமே தென்னை விவசாயம் செய்யப்படுகிறது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் கிணறுகள் வற்றிவிட்டன.

பருவமழை இல்லாததாலும்,தண்ணீர் வற்றி விட்டதாலும், கொளுத்தும் வெயிலாலும் தென்னைமரங்கள் கருகி வருகின்றன. பாளைகள் முழுவதும் உதிர்ந்து மரங்கள் வெறும் கம்பாக காட்சியளிக்கின்றன.

பாதிக்கப்பட்ட தென்னைகளை கணக்கெடுத்து தமிழகஅரசு நிவாரணம் வழங்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**கோத்தர் வயலில் அறுவடை திருவிழா**

கூடலூர் பகுதியிலுள்ள கோத்தர் வயல் பகுதியில் அறுவடை திருவிழா நடைபெற்றது.

அப் பகுதியிலுள்ள ஆதிவாசிகள் தங்களுடைய வயலில் விளைந்த முதல் நெற்கதிரை இறைவனுக்கு படைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் நல்ல விளைச்சல் கிடைத்து பஞ்சமின்றி வாழலாம் என்பது அவர்களின் ஐதீகம்.

கோத்தர்வயல் பகுதியில் பாரம்பரிய முறைப்படி, அவர்களின் இசைக் கருவிகளை இசைத்தவாறு ஊர்பெரியவர் தலைமையில் வயலுக்குச் சென்று பூஜை செய்து நெற்கதிரை அறுவடை செய்தனர். அதை கோவிலுக்கு எடுத்துச் சென்று, நெற்கதிர்களை பிரசாதமாக வழங்கினர்.

**கோமாரி நோயால் கால்நடைகள் பாதிப்பு:இழப்பீடு வழங்கக் கோரிக்கை**

கோமாரி நோயால் கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக இக் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் பாலசுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர்கள் துரைராஜா, ஈஸ்வரமூர்த்தி, சுரேஷ் பொன்னுவேல், சிவராஜ், மாநகர செயலாளர் ஜெகநாதன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகத்திடம் வியாழக்கிழமை அளித்த மனுவின் விவரம்:

ஈரோடு மாவட்டத்தில் பவானி, பெருந்துறை, மொடக்குறிச்சி, சென்னிமலை,

கோபி, நம்பியூர், சத்தியமங்கலம், அந்தியூர் உள்பட பல்வேறு பகுதிகளில்கால்நடைகளை கோமாரி நோய் தாக்கி வருகிறது. பல கால்நடைகள்

கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டன. இதனால் கால்நடைகளை வைத்து பராமரித்து வரும் விவசாயிகளுக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதுபோக அதிகளவு கால்நடைகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால், பால்

உற்பத்தி குறைந்துள்ளது. தாய் மாட்டுக்கு கோமாரி நோய் தாக்கினால்கன்றுக்கும் பரவ வாய்ப்புள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் கோமாரி நோய்தாக்கியுள்ள கால்நடைகளுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்த வேண்டும். மேலும்கோமாரி நோய் தாக்கிய கால்நடைகளை பராமரித்து வரும் விவசாயிகளுக்குநிவாரணம் வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

**கோமாரி நோய் தாக்குதல் தீவிரம்: கால்நடை சந்தைகள் மூடப்படுமா?-**

தமிழகத்தில் கோமாரி நோய் தாக்குதல் தீவிரம் அடைந்து வருவதால், கால்நடை சந்தைகளை தாற்காலிகமாக மூட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

கால்நடைகளை தாக்கும் கொள்ளை நோய் என அழைக்கப்படும் கோமாரி நோய் தமிழகத்தில் கடந்த 15 நாள்களாக தீவிரமாக பரவுகிறது. ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, நாகை, திருவாரூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இந்நோயால் ஆயிரக்கணக்கான பசு மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் நூற்றுக்கணக்கானவை இறந்துள்ளன. எத்தனை கால்நடைகள் இறந்துள்ளன என்பது குறித்து கால்நடை பராமரித்துத் துறை அதிகாரிகளும், வருவாய்த்துறையினரும் கணக்கெடுத்து வருகின்றனர்.

பொதுவாக கோமாரி நோய் காற்றிலும், தண்ணீரிலும் எளிதில் பரவக் கூடியது. இரவு, காலை நேரங்களில் பனி பெய்யும்போது தினமும் 250 மைல்கள் வரை பரவக்கூடிய அளவுக்கு கோமாரி நோயை பரப்பும் கிருமிகளுக்கு சக்தி உண்டு. தமிழகத்தை பொருத்தவரை இப்போது ஆந்திரம், கர்நாடக மாநிலங்களை ஒட்டியுள்ள

ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில்

கோமாரி நோய் தாக்குதல் அதிகமாக இருக்கிறது.

ஆந்திரம், கர்நாடகம் மாநிலங்களில் கோமாரி நோய் தாக்குதல் அதிகமாக இருப்பதால், அங்கிருந்து காற்றிலும், பனி மூலமாகவும் எளிதில் தமிழகத்துக்குள் இந் நோய் பரவுகிறது. அதேபோல தமிழக வனப்பகுதிகளில் மேய்ச்சலுக்கு கெடுபிடி இருப்பதால், எல்லை மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் அண்டை மாநில

எல்லைகளில் தங்களது கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டுச் செல்வதாலும் தமிழகத்துக்குள் கோமாரி நோய் தாக்குல் தீவிரமடைந்துள்ளது.

ஆந்திரம், கர்நாடகம் மாநிலங்களில் கோமாரி நோய் அறிகுறியுடன் தென்படும் பசுமாடுகளை குறைந்த விலைக்கு வாங்கி வரும் வியாபாரிகள், ஈரோடு, தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் நடக்கும் கால்நடைச்சந்தைகள் மூலமாக விவசாயிகளுக்கே தெரியாமல் விற்பனை செய்துவிடுகின்றனர்.

எனவே, இப்பிரச்னைகளை மையமாக வைத்து அவற்றுக்கு தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுத்தால் கோமாரி நோய் தாக்குதல் மேலும் தீவிரமடைவதைக் கட்டுப்படுத்தலாம் என்கின்றனர் விவசாய சங்க நிர்வாகிகள். முதல்கட்டமாக கால்நடை சந்தைகளை குறைந்தபட்சம் 2 மாதங்கள் தாற்காலிகமாக மூட வேண்டும் என விவசாயிகள் சங்கத்தினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்கத்தின் ஈரோடு மாவட்டச் செயலர் டி.சுப்பு கூறியது:

கடந்த 15 நாள்களுக்கும் மேலாக கோமாரி நோய் தாக்குதல் அதிகமாக உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 50-க்கும் மேற்பட்ட பசு மாடுகள் இறந்துவிட்டன. நூற்றுக்கணக்கான மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதுபோல இறந்த மாடுகள் ஏற்கெனவே காப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இவற்றுக்கு காப்பீட்டு கிடைக்காது என காப்பீடு நிறுவன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தடுப்பூசி போட்ட மாடுகள் கூட இறந்துள்ளன. இறந்த மாடுகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவதுடன், இறந்த மாடுகளை கணக்கெடுத்து இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்றார்.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்புச் செயலர் செ.நல்லசாமி கூறியது:

கால்களில் குழாம்பு, பிளவு உள்ள அனைத்து கால்நடைகளையும் கோமாரி நோய் தாக்கும். சந்தைகள் மூலமாகத்தான் இந்த நோய் தீவிரமாக பரவுகிறது. எனவே, முதல்கட்டமாக மாநிலம் முழுவதும் உள்ள கால்நடை சந்தைகளை மூட மாநில அரசு உடனடியாக உத்தரவிட வேண்டும். பறவைக் காய்ச்சல் நோய் பரவியபோது

செக் போஸ்ட் அமைக்கப்பட்டு பரிசோதனை செய்தது போல, இப்போதும் செய்ய வேண்டும். ஒரு மாடு இறந்தால் அதை குழிதோண்டி புதைக்க பொக்லைன் பயன்படுத்த வேண்டியுள்ளதால், ரூ.2,000 செலவாகிறது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் இறந்த மாடுகளை ஆற்றில் வீசுவதால் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும் என்றார்.

**511 மூட்டை கொப்பரை விற்பனை**

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை 511 கொப்பரை மூட்டைகள் ஏல முறையில் விற்பனை செய்யப்பட்டன.

கடந்த வாரத்தை விட கிலோவுக்கு 5 ரூபாய் விலை உயர்ந்திருந்தது. மொத்தம் கொண்டு வரப்பட்டிருந்த 25 ஆயிரத்து 676 கிலோ கொப்பரை 14 லட்சத்து 89 ஆயிரத்து 782 ரூபாய்க்கு விற்பனையானது.

மேல் விலையாக கிலோ ரூ.65.45, மட்ட ரக கீழ் விலை ரூ.43 எனவும் ஏலம் போனது. கடந்த வாரம் 105 மூட்டைகள் மட்டுமே வந்திருந்த நிலையில் விலை ரூ.61.60 ஆக இருந்தது. இத்தகவலை விற்பனைக்கூடக் கண்காணிப்பாளர் ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

**திருந்திய நெல் சாகுபடி நடவு முறை: ஆட்சியர் ஆய்வு**

செங்கம் அருகே புதுப்பாளையத்தில் திருந்திய நெல் சாகுபடி நடவு முறையை மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் வியாழக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செங்கத்தை அடுத்த புதுப்பாளையம் வேளாண்மைத்துறை மூலம் நரசிங்கநல்லூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி முறைக்கு மாதிரி கிராமமாக தேர்தெடுக்கப்பட்டு அந்த கிராமத்தில் 60 ஏக்கர் நிலத்தில் திருந்திய நெல்சாகுபடி பயிர் செய்யப்பட்டுள்ளது. இந்த திருந்திய நெல்சாகுபடி முறை பயிர்களை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது விவசாயிகளிடம் சாதாரண நெல்

சாகுபடிக்கும் திருந்திய நெல் சாகுபடிக்கும் உள்ள வித்தியாசம் மற்றும் பயிர் செய்யும் முறைகள் அதிக அளவு மகசூல் தரும் முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

அதைத் தொடர்ந்து நெல் பயிர்களில் உள்ள களைகளை எடுக்கும் கருவியான (கோனோவீடர்) கருவியின் மூலம் களை எடுக்கும் முறையை மாவட்ட ஆட்சியரிடம் வேளாண்மைத்துறை அதிகாரிகள் செயல் விளக்கம் செய்து காட்டினர்.

ஆய்வின்போது வேளாண்மை இணை இயக்குநர் பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக அதிகாரி (விவசாயம்) அகந்தராவ், வேளாண்மைத்துறை உதவி இயக்குநர்கள் செல்வப்பாண்டியன், அரக்குமார், வேளாண்மை உதவி அலுவலர்கள் தண்டபாணி, கண்ணன், முருகன், சசிகுமார், சங்கர், கோவிந்தராஜ், ஆத்மா திட்ட அலுவலர் சங்கர் உள்பட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**22-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 22-ம் தேதி மாவட்ட அளவில் விவசாயிகள் பங்கேற்கும் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது.

காலை 10.30 மணியளவில் தொடங்கும் இக்கூட்டத்துக்கு ஆட்சியர் இரா.நந்தகோபால் தலைமை தாங்குகிறார்.

**கரும்புக்கு கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படும்: முதல்வர்**

கர்நாடகத்தில் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாள்களில் கரும்புக்கு கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படும் என்று, அந்த மாநில முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரு விதான செப்தாவில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கரும்புக்கு குறைந்தபட்ச கொள்முதல் விலை நிர்ணயிக்க வலியுறுத்தி, விவசாயிகள் மாநில அளவில் நடத்தி வரும் போராட்டங்களைக் கைவிட வேண்டும். இன்னும் இரண்டு அல்லது மூன்று நாள்களில் கரும்புக்கு குறைந்தபட்ச கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படும்.

இதுகுறித்து உயரதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் மீண்டும் நடைபெறும். விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலைகளின் நலனை கருத்தில் கொண்டு கொள்முதல் விலையை அரசு நிர்ணயிக்கும். எனவே, இதுகுறித்து விவசாயிகள் குழப்பம் அடைய வேண்டாம்.

கல்லூரி மாணவி செப்ஜன்யா கொலை வழக்கை சிபிஐ விசாரணைக்கு ஒப்படைத்துள்ளோம். வருகிற 25-ஆம் தேதி பெல்காமில் சட்டப்பேரவை குளிர்கால கூட்டத் தொடர் நடைபெறும். இதில் பல்வேறு பிரச்னைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றார் அவர்.

**புன்செய் விவசாய மேம்பாட்டுக்கு தனிக் கொள்கை**

கர்நாடகத்தில் புன்செய் விவசாய மேம்பாட்டுக்கு தனிக் கொள்கை வகுக்கப்படும் என்று, முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

பெங்களூரு விவசாயப் பல்கலைக்கழகம் சார்பில், பெங்களூரு காந்தி வேளாண் அறிவியல் மையத்தில் 5 நாள்கள் நடைபெறும் பன்னாட்டு விவசாயக் கண்காட்சியை வியாழக்கிழமை தொடக்கிவைத்து அவர் பேசியது:

அண்மைக்காலமாக புன்செய் விவசாயம் நலிந்து வருகிறது. இந்த விவகாரத்தை வேளாண் விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்து, தீர்வு காண வேண்டும். புன்செய் விவசாயம் தொடர்பாக அதிகளவில் ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டும். புன்செய் விவசாயம், குறுநில விவசாயிகளின் மேம்பாட்டுக்காக தனிக் கொள்கை வகுக்கப்படும்.

ராஜஸ்தான் மாநிலத்திற்கு அடுத்தபடியாக நாட்டில் புன்செய் விவசாயத்தை நம்பியிருப்போர் எண்ணிக்கை கர்நாடகத்தில் அதிகம். எனவே, புன்செய் விவசாயத்தை ஊக்குவிக்க அரசு தயாராக உள்ளது.

புன்செய் விவசாயத்திற்கு தகுந்த விதைகள், நாற்றுகளைக் கண்டறிய வேண்டும். புன்செய் நிலத்தில் அதிக மகசூல் கிடைக்கும் பயிர்கள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம்.

இதேபோல, கால்நடைவளர்ப்பு, பால் உற்பத்தி, பன்றி வளர்ப்பு போன்ற விவசாயம் சார்ந்த தொழில்களில் விவசாயிகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும்

முக்கியத்துவம் அளிக்கப்படும். விவசாயிகளின் நலன் கருதி விவசாயப் பல்கலைக்கழகம் மேற்கொள்ளும் அனைத்து ஆராய்ச்சிப் பணிகளுக்கும் கர்நாடக அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும். விவசாயத் தொழில் லாபகரமானதாக மாறினால், பலரும் இந்தத் தொழிலில் ஈடுபடுவார்கள்.

உற்பத்திச் செலவை குறைத்தால் விவசாயத்தில் லாபம் கிடைக்கும். அதற்கான வழிமுறைகளை விவசாயப் பல்கலைக்கழகங்கள் கண்டறிய வேண்டும். இதுதொடர்பான ஆராய்ச்சிகள் அதிகளவில் நடைபெற வேண்டும். பன்னாட்டு வேளாண் கண்காட்சிகளை போல, மாவட்ட அளவில் வேளாண் கண்காட்சிகள் நடைபெற வேண்டும் என்றார் அவர்.

விழாவில் மாநில வேளாண் துறை அமைச்சர் கிருஷ்ண பைரேகெப்டா, பல்கலைக்கழகத் துணைவேந்தர் நாராயண கெப்டா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வெங்காயம், தக்காளி வரிசையில் உருளைக் கிழங்கு விலையும் உயர்ந்தது**

தில்லியில் வெங்காயம், தக்காளி விலை உயர்வைத் தொடர்ந்து உருளைக்கிழங்கு விலையும் உயர்ந்துள்ளது.

காய்கறி வரத்துக் குறைந்ததன் காரணமாக, தக்காளியின் விலை கிலோ ரூ. 80 வரை விற்கப்படுகிறது. அதிகரித்த வெங்காயத்தின் விலை தற்போது கிலோ ரூ. 60 முதல் 70 வரை விற்கப்படுகிறது. இந்நிலையில் உருளைக்கிழங்கின் விலையும் உயர்ந்துள்ளதால் ஏழை, நடுத்தர மக்கள் கவலையடைந்துள்ளனர்.

இதனிடையே, மதர் டெய்ரி விற்பனையகங்களில் தக்காளி கிலோ ரூ. 62க்கும், வெங்காயம் கிலோ ரூ. 60க்கும் விற்கப்படுகின்றன. ஆனால், சில்லறைக் கடைக்காரர்கள் தக்காளியை கிலோ ரூ.80 வரை விற்கின்றனர். இந்நிலையில், உருளைக்கிழங்கின் விலையும் அதிகரித்துள்ளது. பழைய உருளைக் கிழங்கு கிலோ ரூ. 25 முதல் 30 வரையும், புதிய உருளைக் கிழங்கு கிலோ ரூ. 40 வரையும் விற்கப்படுகின்றன.

இந்த விலை உயர்வு தொடர்பாக ஆசாத்பூர் காய்கறி வியாபாரிகள் சங்க நிர்வாகி ஒருவர் கூறுகையில், "புதிதாக விளையும் காய்கறிகளின் வரத்து அதிகரித்தவுடன் விலைகள் குறையத் தொடங்கும். புதிதாக விளைந்த காய்கறிகள் சந்தைக்கு வரத் தொடங்கிய அக்டோபர் மூன்றாவது வாரத்தில் இருந்து தற்போது வரை ரூ. 20 என்ற அளவில் விலை குறைந்துள்ளது. இத்துடன், தேவைக்கு அதிகமான வெங்காயம் மண்டிகளுக்கு வரத் தொடங்கியுள்ளதும் விலை குறைவுக்கு காரணம்' என்றார்.

ஆசாத்பூர் மண்டியில் மற்றொரு வியாபாரி கூறுகையில், "மத்திய பிரதேச மாநிலம் ரத்லாம் மற்றும் மகாராஷ்டிர மாநிலத்திலிருந்து வழக்கமாக வரும் தக்காளியின் வரத்து குறைந்ததும், இமாசல பிரசேத்திலிருந்து தக்காளியின் வரத்து கணிசமாக குறைந்ததும்தான் தக்காளி விலை உயர்வுக்கு காரணம். இத்துடன், தீபாவளி, சட் ஆகிய பண்டிகைகளால் காய்கறிகள் வரத்து குறையத் தொடங்கியுள்ளது.

தற்போதுள்ள தக்காளி, உருளைக் கிழங்கு ஆகியவற்றின் வரத்து சந்தை தேவையைப் பூர்த்தி செய்யவில்லை. சில மண்டிகளில் உருளைக் கிழங்கு புதிய விளைச்சல் வரத் தொடங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இத்துடன் மழை பெய்யாமலிருந்து, இயல்பான வானிலை காணப்பட்டால் வரும் நாள்களில் காய்கறி விலை குறையத் தொடங்கும்' என்றார் அவர்.

**பயிர், கால்நடை காப்பீடு:வம்பனில் இன்று இலவசப் பயிற்சி**

பயிர் மற்றும் கால்நடை காப்பீடு செய்வது குறித்த ஒருநாள் இலவசப் பயிற்சி வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வெள்ளிக்கிழமை (நவ. 8) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வறட்சி, புயல், அதிக வெப்பம், அதிக மழை, அதிகக் காற்று போன்ற இயற்கை இடர்பாடுகளால் நெல், மக்காச்சோளம், சோளம் போன்ற தானியப் பயிர்கள், வாழை, காய்கறிகள், மலர்கள் போன்ற தோட்டப்பயிர்கள் மற்றும் பிற பயிர்களில் இழப்பும், மகசூல் இழப்பும் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட உதவி செய்வது பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மட்டும்தான். அதில், மத்திய அரசின் வேளாண் காப்பீட்டு நிறுவனம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களில் விவசாயிகள் அதிக அளவில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என்ற நோக்கில், பிரிமியத்தில் பாதித் தொகையை விவசாயிகள் செலுத்தினால் போதும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

புதுகை மாவட்ட விவசாயிகள் பயிர் மற்றும் கால்நடை காப்பீடு செய்து பயன்பெறும் வகையில், காப்பீடு செய்யும் முறைகள் குறித்த ஒருநாள் பயிற்சி வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் இந்தப் பயிற்சியில் பங்கேற்று பயனடையலாம். மேலும் விவரங்களுக்கு, வம்பன் வேளாண் நிலைய தலைவர், பேராசிரியர் மு. அசோகனை 94447 19043 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**ரப்பர் விலை கிலோ ரூ. 141 ஆக சரிவு**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் விலை கிலோ ரூ. 141 ஆக சரிந்துள்ளது. இதனால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள், ரப்பர் இறக்குமதிக்குத் தடைவிதிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த செப்டம்பரில் கிலோ ரூ. 175-க்கு விற்பனையான ரப்பர், படிப்படியாக சரிவடைந்து வருகிறது. வியாழக்கிழமை இதன் விலை கிலோவுக்கு ரூ. 141 ஆக சரிந்தது.

தொடர் சரிவால் கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் விவசாயிகள் கடும் நெருகடிக்கு உள்ளாகி வருகின்றனர். இந் நிலை தொடர்ந்தால் ரப்பர் மரங்களிலிருந்து பால்வடிப்பதை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு தாங்கள் தள்ளப்படும் நிலை ஏற்படும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சிறு ரப்பர் விவசாயிகள் சங்க நிர்வாகி ஜி. கிருஷ்ணன் நம்பூதிரி கூறியதாவது:

இந்தியாவில் ரப்பர் விலை தொடர்ந்து சரிவதற்கு, மலேசியா, தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய முன்னணி ரப்பர் உற்பத்தி நாடுகளிலிருந்து ரப்பர் இறக்குமதி செய்யப்படுவதே காரணம். அங்கு ரப்பர் விலை குறைவாக இருக்கும் நிலையில் இந்திய டயர் ஆலை நிறுவனங்கள் ரப்பரை தாராளமாய் இறக்குமதி செய்கின்றன.

கடந்த அக்டோபரில் மட்டும் 33,486 டன் ரப்பரை டயர் ஆலைகள் இறக்குமதி செய்துள்ளன. உள்நாட்டில் ரப்பர் உற்பத்தி அதிகமாக இருக்கும் நிலையில், இறக்குமதிக்கு மத்திய அரசு தடைவிதிக்கவில்லை.

இந்த விலை வீழ்ச்சி கேரள மாநில, கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் விவசாயிகளுக்கு பேரிடியாக உள்ளது. குறிப்பாக, சிறு விவசாயிகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இப்போது நிலவும் விலைவாசி, கூலி உள்ளிட்ட காரணங்களால் கிலோ ரப்பருக்கு ரூ. 200 என விலை கிடைக்க வேண்டும். ஆனால், கிலோ ரூ. 141-க்கு விற்பனையாகிறது. விலையைவிட  உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளது.

இந்நிலை தொடர்ந்தால் விவசாயிகள் ரப்பர் பால் வடிப்பதை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே, ரப்பர் இறக்குமதிக்கு மத்திய அரசு ரப்பர் தடைவிதிக்க வேண்டும் என்றார் அவர்.

**"விவசாயிகள் உயிர்உரங்களைப் பயன்படுத்த வேண்டும்'**

திருச்செந்தூர் வட்டாரத்தில் பிசானப் பருவ நெற்சாகுபடியின்போது உயிர் உரங்களைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி அறிவுரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக திருச்செந்தூர் வேளாண் உதவி இயக்குநர் க.பிரம்மநாயகம் வெளிட்டுள்ள அறிக்கை: விவசாயிகள் அதிகமான ரசாயன உரங்களை இடுவதால் மண்ணின் தன்மை பாதிக்கப்படுகிறது. இதனை தவிர்க்க விவசாயிகள் மக்கிய தொழு உரம், பசுந்தாள் உரம் உள்ளிட்ட இயற்கை உரங்கள் அல்லது உயிர் உரங்களை இட்டு பயன்பெற வேண்டும்.

உயிர் உரங்களான அசோஸ் பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா மற்றும் நெல் நுண்ணூட்டம் ஆகியவை விவசாயிகளுக்கு தேவையான அளவு திருச்செந்தூர், சோனகன்விளை மற்றும் ஆறுமுகனேரி வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

அவற்றை விவசாயிகள் வாங்கி நெற்பயிருக்கு இட்டு அதிக மகசூல் பெற்று பயன்பெற வேண்டும் என்றார் அவர்.

**அணைகள் நீர்மட்டம் மேலும் உயர்வு**

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்தது.

வியாழக்கிழமை இம்மாவட்டத்தில் மழை குறைந்த அளவில் பதிவாகியுள்ளது. அதன் விவரம் (மி.மீட்டரில்) பாபநாசம் அணை 19, பாபநாசம் கீழ்அணை 18, சேர்வலாறு அணை 25, மணிமுத்தாறு அணை 5.6, ராமநதி அணை 4, வடக்குப் பச்சையாறு அணை 17.6, நம்பியாறு அணை 6, கொடுமுடியாறு அணை 17, அம்பாசமுத்திரம் 7, சேரன்மகாதேவி 3.

பாபநாசம் அணைக்கு நொடிக்கு 1586.57 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 961 கனஅடியும், கடனாநதி அணைக்கு 67.07 கனஅடியும், ராமநதி அணைக்கு 62.63 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2.40 அடி உயர்ந்து 87.30 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 1.50 அடி உயர்ந்து 101.51 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 1.60 அடி உயர்ந்து 63.60 அடியாகவும் இருந்தது.

**வேளாண் வளர்ச்சிப் பணிகள் ஆய்வு**

பெரம்பலூர் மாவட்டத்தில், வேளாண்மைத்துறை மூலம் ரூ. 2.69 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள், செயல் விளக்க திடல்களை மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் சத்திரமனை நீர்வடிப்பகுதியில் ரூ. 1 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை, பொம்மனப்பாடி நீர்வடிப்பகுதியில் உள்ள குட்டையில் ரூ. 1 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வெளிபோக்கு அணையை பார்வையிட்ட ஆட்சியர், வேலூர் நீர்வடிப்பகுதியில் அரசு மானிய உதவித்தொகையுடன் அமைக்கப்பட்டுள்ள மண் புழு உரம் தயாரிப்பதற்கான செயல் விளக்க திடலை பார்வையிட்டு, திடலை முறையாக மூடி பராமரிப்பதோடு, இனி வரும் காலங்களில் இந்த செயல் விளக்க திடலுக்கு வழங்கப்படும் உபகரணங்கள் முறையாக மூடி பொருத்தப்பட்டு வழங்க நடவடிக்கை எடுக்க மேற்கொள்ள வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், அரசு மானிய உதவித்தொகையுடன் மக்காச்சோள பயிர் செயல் விளக்க திடல் அமைக்கப்பட்ட பகுதிகளையும், செட்டிக்குளத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 1.14 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 50 மெட்ரிக் டன் கொள்ளவு உள்ள வெங்காய குளிர் பதன சேமிப்பு கிடங்கையும், எளம்பலூர் காந்திநகர் பகுதியில் ரூ. 32 லட்சம் மதிப்பீடில் 25 மெட்ரிக் டன் கொள்ளவு உள்ள தானிய குளிர்பதன கிடங்கையும், அதே பகுதியில் ரூ. 1 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தானிய சேமிப்பு கிடங்கையும் பார்வையிட்ட ஆட்சியர், குறிப்பிட்ட காலத்திற்குள் கிடங்குகளுக்கான கட்டடப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் கனகசபை, வேளாண்மை உதவி இயக்குநர்கள் கண்ணன், பாண்டியன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**08.11.2013**

## தேனீ வளர்ப்பு செயல்விளக்கம்

ராசிபுரம்: தேனீ வளர்ப்பு குறித்த செயல்விளக்க முகாம், மின்னக்கல் கிராமத்தில் நடந்தது.

ராசிபுரம் அடுத்த வெண்ணந்தூர், மின்னக்கல் கிராமத்தில், அட்மா திட்டத்தின் கீழ், தேனீ வளர்ப்பு குறித்த செயல்விளக்கம் நடந்தது. வெண்ணந்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சீனிவாசன், தேனீ வளர்ப்பின் பயன், ஈடுபாடு, விவசாயத்தில் அடையும் நன்மை, தொழில்நுட்பம் ஆகியவை குறித்து, விவசாயிகளுக்கு விளக்கினார்.

சித்தாளந்தூர் ஆர்.கே.தேனீ பண்ணையின் தேனீ வளர்ப்பு நிபுணர் ராதா கிருஷ்ணன், தேனீ வளர்ப்பு தொடர்பான விவசாயிகளின் வினா மற்றும் சந்தேகங்களுக்கு, பதில் அளித்தார். வெண்ணந்தூர் வட்டார வேளாண்மை அலுவலர் வசுமதி, துணை வேளாண்மை அலுவலர் பசுபதி, அட்மா திட்ட அலுவலர்கள் ரமேஷ், ஜமுனாராணி, விவசாயிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## துவரை சாகுபடிக்கு மானியம்

ராசிபுரம்: "துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, செட்டுநீர் பாசன முறையில், 100 சதவீத மானியத்தில் நிதி வசதி செய்து தரப்படும்' என, வெண்ணந்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

வெண்ணந்தூர் வட்டாரத்தில், வேளாண் துறை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்ட பயறு இயக்க திட்டத்தின் கீழ், துவரை நாற்றங்கால் சாகுபடி

மேற்கொண்ட விவசாயிகளுக்கு, மானிய விலையில், 30 ஏக்கருக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
துவரை நாற்றங்கால் சாகுபடி செய்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்திலும், மற்ற விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியத்திலும் நிதியுதவி செய்யப்படும். எனவே, துவரை நாற்றங்கால் சாகுபடியில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க விருப்பம் உள்ள விவசாயிகள், வெண்ணந்தூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகி பயன்பெற வேண்டும்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோதுமை ஒதுக்கீடு பாதியாக குறைப்பு பற்றாக்குறை ஈடுகட்டியும் ஆர்வமில்லை

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில், கோதுமை பற்றாக்குறையை ஈடுகட்ட, போதிய ஒதுக்கீடு பெறப்பட்டும், பயனாளிகளிடம் ஆர்வம் இல்லாததால், மீண்டும் பாதியாக குறைக்கப்பட்டது.
தமிழக அரசின் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் இருந்து, ரேஷன் கடைகளுக்கு, அரிசி, கோதுமை, சர்க்கரை ஆகிய உணவுப் பொருட்கள், மானிய விலையிலும், விலையில்லாமலும் வழங்கப்படுகிறது.
ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு ரேஷன் கடைக்கும் தேவையான பொருட்கள் குறித்து, "இன்டென்ட்' கோரப்படும். அதன்படி, பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படும். விலையில்லா அரிசி திட்டத்தில், ஒவ்வொரு ரேஷன் கார்டிலும் உள்ள பெரியவருக்கு நான்கு கிலோ, சிறியவருக்கு இரண்டு கிலோ, குறைந்தபட்சமாக, 12 கிலோ, அதிகபட்சமாக, 20 கிலோ என்ற முறையில் வழங்கப்படுகிறது.
அதேபோல், மத்திய அரசின் சார்பில், மானியமாக வழங்கப்படும், அந்தியோதன அன்ன யோசனா திட்டத்தில், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள ரேஷன் அட்டைதாரருக்கு, மாதத்துக்கு, 35 கிலோ, அன்னபூர்ணா திட்டத்தில், பத்து கிலோ, முதியோர் திட்ட பயனாளியில், சத்துணவு திட்டத்தில் சேராதவருக்கு,

நான்கு கிலோ, சத்துணவு திட்டத்தில் சேர்ந்தவருக்கு, இரண்டு கிலோ ஆகிய வகையில் வழங்கப்படுகிறது.

சர்க்கரை ஒதுக்கீட்டின்படி, ஒரு நபருக்கு, 500 கிராம் வீதம், குறைந்தபட்சமாக, இரண்டு கிலோ, சர்க்கரை அட்டைக்கு, மூன்று கிலோ வழங்கப்படுகிறது.

மண்ணெண்ணெய் பற்றாக்குறையாக இருப்பதால், ஏற்கனவே வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் பாதியாக குறைத்து வழங்கப்படுகிறது.

துவரம் பருப்பு, உளுந்தம்பருப்பு, பாமாயில் ஆகியவை தலா ஒரு ரேஷன் கார்டுக்கு, ஒரு கிலோ வீதம் வழங்கப்படுகிறது. அதில், கோதுமை ஒதுக்கீடு கடந்த காலங்களில், பாதியாக குறைக்கப்பட்டதால், பயனாளிகள் கோதுமை கிடைக்காமல் அவதிப்பட்டனர்.

சென்னை உள்ளிட்ட புறநகருக்கு, பத்து கிலோவும், மற்ற பகுதிகளுக்கு, ஐந்து கிலோவும் வழங்கப்பட்டது. ஆனால், மத்திய அரசின் ஒதுக்கீடு குறைந்ததால், கோதுமை சப்ளை, ரேஷன் கடைக்கு பாதியாக குறைத்து வழங்கப்பட்டது. முழுமையாக ஒதுக்கீடு செய்து வழங்க வேண்டும் என்று, அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள, 902 பகுதி மற்றும் முழு நேர ரேஷன் கடைகளில், நான்கு லட்சத்து, 98 ஆயிரத்து, 700 ரேஷன் கார்டுகள் உள்ளன. அதற்கு, கடந்த, ஆகஸ்ட் மாதம் வரை, கோதுமை ஒதுக்கீடாக, 500 மெட்ரிக் டன் ஒதுக்கப்பட்டது. பற்றாக்குறை நிலவியதால், அப்போது நாமக்கல் வந்த சட்டசபை குழுவிடம், கூடுதல் கோதுமை கேட்டு கோரிக்கை வைக்கப்பட்டது.

அதன்படி, செப்டம்பர் மாதத்தில் இருந்து, 992 மெட்ரிக் டன் கோதுமை ஒதுக்கீடு செய்து வழங்க உத்தரவிடப்பட்டது. ஆனால், ரேஷன் பயனாளிகள், தங்களுக்கு தேவையான கோதுமையை விரும்பி வாங்கவில்லை. இருப்பு அப்படியே இருந்ததால், கோதுமையில் பூச்சிகள் புகுந்தன.

அதிர்ச்சியடைந்த அதிகாரிகள், அக்டோபர் மாதத்தில் இருந்து, பழைய அளவுக்கும்

கொஞ்சம் கூடுதலாக, 508 மெட்ரிக் டன் போதுமானது என, அரசிடம் தெரிவித்தனர். அதையடுத்து, பற்றாக்குறையை அரசு பூர்த்தி செய்தும், பயனாளிகளிடம் கோதுமை வாங்கும் விருப்பம் இல்லாததால், பழையபடி ஒதுக்கீடு குறைக்கப்பட்டது.

"சட்டசபை குழுவிடம் போராடி கோதுமை ஒதுக்கீடு அதிகரித்தும், மக்களிடம் வாங்கும் ஆர்வம் இல்லாததால், பழைய ஒதுக்கீடு மட்டும் பெறப்படுகிறது' என, வழங்கல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விவசாயிகள் எதிர்பார்ப்பு சேலம் மாவட்டத்தில் வட கிழக்கு பருவ மழை கை கொடுக்குமா?

சேலம்: சேலம் மாவட்டத்தில், தென் மேற்கு பருவமழை, "கை' கொடுத்தது போல், வட கிழக்கு பருவமழை பெய்யுமா என, எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

சேலம் விவசாயம் சார்ந்த மாவட்டம். இங்கு தோட்டக்கலை பயிர் அதிகளவு பயிரிடப்படுகின்றன. அதே போல், பூக்கள் விளைச்சலும் அதிகம். கடந்தாண்டு, சேலம் மாவட்டத்தில், போதுமான மழை பெய்யவில்லை.

நடப்பாண்டு, கோடை மழை சரிவர பெய்யாவிட்டாலும், தென் மேற்கு பருவமழை, சராசரி அளவை விட அதிகரித்தது. சேலம் மாவட்டத்தில், தென் மேற்கு பருவமழை காலத்தில், 406.9 மி.மீ., வட கிழக்கு பருவமழை காலத்தில், 376.6 மி.மீ., என, ஆண்டொன்றுக்கு, சராசரியாக, 993.9 மி.மீ., மழை பெய்ய வேண்டும்.

சேலம் மாவட்டத்தில், 2006ல், 888.2 மி.மீ., 2007ல், 984.5 மி.மீ., 2008ல், 1,127.5 மி.மீ., 2009ல், 854.7 மி.மீ., 2010ல், 1,225.9 மி.மி., 2011ல், 1,014.4 மி.மீ., 2012ல், 798.5 மி.மீ., மழை பெய்துள்ளது. நடப்பாண்டு, இதுவரை, 714. மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

சேலம் மாவட்ட வேளாண் அதிகாரிகள் கூறியதாவது:

கடந்த, 2006 முதல், 2013ம் ஆண்டு வரை பெய்த மழை அளவை ஒப்பிடும் போது, 2008, 2010 மற்றும் 2011ம் ஆண்டுகளில் மட்டுமே சராசரி அளவை விட, அதிக மழை பெய்துள்ளது. மற்ற ஆண்டுகளில், சராசரி அளவுக்கும் குறைவாகவே மழை

பெய்துள்ளது. சேலம் மாவட்டத்தில், 2013ம் ஆண்டு குளிர் காலத்தில், 17.5 மி.மீ., மழை பெய்துள்ளது. இது சராசரி மழையை விட, 9.5 மி.மீ., மழை அதிகம். கோடை காலத்தில், 74.7 மி.மீ., மழை பெய்துள்ளது. இது சராசரி மழையை விட, 131.7 மி.மீ., மழை குறைவாகும்.

தென் மேற்கு பருவமழை காலத்தில், 470.6 மி.மீ., மழை பெய்துள்ளது. இது சராசரி மழையை விட, 63.7 சதவீதம் அதிகம். வடகிழக்கு பருவ காலமான, அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில், 376.6 மி.மீ., மழை என்பது சராசரி அளவு. இதுவரை சேலம் மாவட்டத்தில், 152.1 மி.மீ., மழை பெய்துள்ளது. டிசம்பர் மாதத்துக்குள், 224.5 மி.மீ., மழை பெய்தால் மட்டுமே சராசரி மழையின் அளவை எட்ட முடியும். இந்தாண்டு சராசரியை விட, அதிக மழை பெய்யும், என்று எதிர்பார்ப்பு உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதி

அவலூர்பேட்டை :மேல்மலையனூர் வட்டாரத்தில் துவரை சாகுபடி செய்திட 100 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர் பாசன வசதிகள் அமைத்து தரப்படுகிறது.
மேல்மலையனூர் வேளாண் உதவி இயக்குனர் பழனிவேலு விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

மேல்மலையனூர் வட்டாரத்தில் துவரை சாகுபடி செய்திட சொட்டு நீர் பாசன வசதிகளை 100 சதவீதம் மானியத்தில் அமைக்கப்படுகிறது. துவரை நாற்று விட்டு நடவு செய்தால் ஏக்கருக்கு ஒரு டன் மகசூல் பெறலாம். புரத சத்து நிறைந்த துவரம் பருப்பு சத்தான உண

வாகும். துவரை சாகுபடி செய்துள்ள அனைத்து விவசாயிகளும் சொட்டு நீர்பாசனம் 100 சதவீத மானியத்தில் அமைக்கவும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்களது உதவி வேளாண் அலுவலர்களை அணுகி தேவையான ஆவணங்களை அளித்து பயன் பெறலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று 87.30 அடியாகியது.

விக்கிரமசிங்கபுரம்:பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று 87.30 அடியாகியது. நேற்று முன்தினம் 84.90 அடியாக இருந்த பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று சுமார் 3 அடி அதிகரித்து 87.30 அடியாகியது. அணைக்கு விநாடிக்கு 1586.57 கனஅடி நீர் வந்துகொண்டிருந்தது. அணை பகுதியில் 19 மி.மீ., பாபநாசம் கீழ் அணையில் 7 மி.மீ., சேர்வலாரில் 25 மி.மீ., மணிமுத்தாரில் 5.6 மி.மீ., அம்பையில் 7 மி.மீ., சேரன்மகாதேவியில் 3 மி.மீ., அளவு மழையின் அளவு பதிவாகியுள்ளது. நேற்று சேர்வலார் அணையின் நீர்மட்டம் 101.51 அடியாகியது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 961 கனஅடிநீர் வந்து 10 கனஅடிநீர் வெளியேறி அணையின் நீர் மட்டம் 63.60 அடியாக இருந்தது.

## மழையால் மலர்ந்தது வெற்றிலை கொடிக்கால் உற்சாகத்தில் பெரியபட்டினம் விவசாயிகள்

கீழக்கரை : பெரியபட்டினம் உட்பட பல பகுதிகளில் சில தினங்களாக பெய்து வரும் மழையால், காய்ந்த நிலையில் காணப்பட்ட வெற்றிலை செடிகள் வளர்ந்து "பச்சை பசெலேன' மாறியுள்ளன. விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

பெரியபட்டினம், முத்துபேட்டை, புதுமடம் ஆகிய கிராமங்களில் ஏராளமானோர் வெற்றிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக மழையின்றி விவசாயிகள், பெரும் இழப்பை சந்தித்தனர்.

நடப்பாண்டில் வருண பகவானின் கருணை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வெற்றிலை சாகுபடியில் இறங்கினர். வெற்றிலை செடிகள் கருகும் அபாய நிலையில் அக்டோபரில் காய்ந்தன. விவசாயிகள் கவலையடைந்தனர்.

சில நாட்களாக பெய்து வரும் மழையால், வெற்றிலை கொடிக்கால் பசுமையுடன் காணப்படுகிறது. நேற்று காலை பெரியபட்டினத்தில் பலத்த காற்று வீசியதால், கொடிக்கால் உள்ளே இருந்த மரம் சாய்ந்து ஏராளமான செடிகள் சேதமடைந்தன. பெரியபட்டினம் நாகரத்தினம் கூறும்போது: இங்கு விளையும் வெற்றிலைகள், ருசி மிகுந்தவை. தமிழகம் மட்டுமில்லாமல் வெளிமாநிலங்களிலும் நல்ல கிராக்கி

உள்ளது. மொத்த வியாபாரிகள் ஆர்வத்துடன் வெற்றிலைகளை வாங்கி வந்தனர். சில ஆண்டுகளாக இயற்கை இடர்பாடுகளின் காரணமாக பொருளாதார நெருக்கடியில் சிக்கி ஏராளமானோர் மாற்று தொழிலுக்கு சென்று விட்டனர். வெற்றிலை கொடிக்கால்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்து விட்டது, என்றார். பெரியபட்டினம் வெற்றிலை விவசாயி அன்சாரி கூறியதாவது:

ஒரு ஏக்கரில் வெற்றிலைக் கொடி சாகுபடிக்கு, ஒரு லட்ச ரூபாய் வரை செலவாகிறது.

வெற்றிலைகளில் நோய் தாக்குதல் இல்லையெனில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு பலனை அனுபவிக்க முடியும். சில தினங்களாக பெய்து வரும் மழை ஆறுதலை அளித்துள்ளது. பலத்த காற்று வீசினால் பெருமளவு பாதிக்கப்படும். மற்ற விவசாயத்திற்கு அளிக்கப்படும் சலுகைகள், வெற்றிலை விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டும் என நீண்ட நாட்களாக கோரிக்கையை அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் உள்ளனர், என்றார்.

## ஏலக்காய் விலையை மிஞ்சிய அயிரை மீன்

போடி : தேனி மாவட்டத்தில் அயிரை மீன்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஏலக்காய் விலையை விட கிலோவிற்கு 200 ரூபாய் வரை அதிகரித்து 800க்குள் விற்கப்படுகிறது. ஆற்றுப்பகுதியில் நீர் வரத்து குறைந்து வரும் நிலையில் மட்டுமே அயிரை மீன்களை பிடிக்க முடியும். ஆற்றோரத்தில் சிறிய குழி தோண்டி அதில் ஓடிவரும் அயிரை மீன்களை துணியை விரித்து பிடிக்க முடியும். தற்போது, பெய்து வரும் பருவ மழையால் ஆற்றுப்பகுதியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், அயிரை மீன்களை பிடிப்பது இயலாத காரியம். ஆற்றோரங்களில் குழி தோண்டி, பல மணி நேரம் காத்திருந்தாலும் குறைந்தளவு மீன்களே கிடைக்கின்றன. வரத்து குறைவால், கிலோ 600 ரூபாய்க்கு விற்கப்பட்ட அயிரை மீன்கள்,800 ரூபாய்க்கும் மேல் விற்பனை செய்யப்படுகிறது. மழை மற்றும் தட்பவெப்பநிலை மாற்றத்தால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சளி, இருமல், காய்ச்சலால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு, அயிரை மீன்கள் சிறந்தது என நம்பப்படுகிறது. ஏலக்காய் வரத்து துவங்கிய நிலையில், கிலோ 600 முதல் 800 ரூபாய் வரை

விற்பனையாகிறது. இந்நிலையில் ஏலக்காய் விலையை காட்டிலும், தற்போது அயிரை மீன் விலை 200 வரை அதிகரித்து 800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## தேனி மாவட்ட திராட்சை விவசாயிகள் கவலை கிலோ ரூ.20க்கு விற்கப்படுவதால்

கம்பம் :தேனி மாவட்டத்தில் திராட்சைக்கு, கிலோ 20 ரூபாய்க்கும் குறைவாக விலை கிடைப்பதால், திராட்சை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கில், ஆண்டு முழுவதும் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. சமீபத்தில் ஏற்றுமதி ரகங்களான ரெட்குளோப் உள்ளிட்ட பல புதிய ரகங்கள் விவசாயிகளால் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.இருந்தாலும் திராட்சைக்கு நிலையான விலை கிடைப்பதில் தொடர்ந்து சிக்கல் காணப்படுகிறது. திடீரென விலை ஏறுவதும், அதல பாதாளத்திற்கு போவதும் வாடிக்கை. இங்கு சாகுபடியாகும் திராட்சை பெரும்பாலும் கேரளாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த மாதம் திராட்சை கிலோ ரூ. 40 முதல் 48 வரை விற்றது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். தற்போது, பெய்து வரும் மழையால், கிலோ ரூ. 20 க்கும் குறைவாக கிடைக்கிறது. இந்த விலை குறைவு விவசாயிகளை கவலையடைய வைத்துள்ளது. திராட்சை விவசாயிகள் கூறியதாவது:

விலை குறைவு என்பது விவசாயிகளுக்கு பழகிவிட்டது. விலை ஏறுவதும் இறங்குவதும் வாடிக்கை. தை மாதம் வரை விலை இதே நிலையில் தான் நீடிக்கும். அதன் பிறகு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது. தற்போது பெய்து வரும் மழையால் பயிரில் பாதிப்பில்லை. செவட்டை நோய் தாக்க வாய்ப்புள்ளது. கடந்த சீசனில் உற்பத்தி பாதிக்கப்பட்டது. வரும் சீசனில் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது' என்றனர்.

## சேலம் சந்தையில் பாக்கு வரத்து சரிவு

சேலம்: சேலம் சந்தையில் பாக்கு வரத்து குறைந்து உள்ளது. சேலம் மாவட்டத்தில், வாழப்பாடி, சிங்கபுரம், பள்ளக்காடு, செந்தாரப்பட்டி, குறிச்சி, பேளூர், மணக்காடு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான பாக்குத் தோட்டங்கள் உள்ளன.

பாக்கு மரத்திலிருந்து பறிக்கப்படும் பாக்குகளை, விவசாயிகள் சேலம் – செவ்வாய்ப்பேட்டை சந்தைக்கு, செவ்வாய்தோறும் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.பாக்குகளை விற்பனை செய்ய வந்த விவசாயிகள் கூறியதாவது:இந்த ஆண்டு, பாக்குக்கு, போதிய விலை கிடைக்க வில்லை. ஆயுதபூஜை, மகாளய அமாவாசை, தீபாவளி என, பண்டிகைகள் வந்தாலும், விலை கிடைக்கவில்லை. இனி, திருமண முகூர்த்த காலத்தில், பாக்கு விலையில் ஏற்றம் இருக்கும் என, நம்பிஉள்ளோம்.இது தவிர, வாழப்பாடி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், ஏற்காடு இடைத்தேர்தல் பணி சூடு பிடித்துள்ளது. பெரும்பாலானோர் இடைத்தேர்தலில் ஆர்வம் காட்டத் துவங்கி விட்டனர்.கடந்த ஆண்டு, சேலம் மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டதில், பாக்கு உற்பத்தி பாதித்தது. தண்ணீர் விட்டதால், சில மரங்கள் தப்பியது. தப்பிய மரங்களில் இருந்து தான் பாக்குகள் பறிக்கப்படுகின்றன. தற்போது சீசனாக இருந்தாலும், போதிய விளைச்சல் இல்லை.

சந்தையில், 70 கிலோ எடை கொண்ட, நூற்றுக்கும் மேற்பட்ட பாக்கு மூட்டைகள் வரத்தாகின. ஒரு கிலோ பாக்கு, 380 முதல், 400 ரூபாய் வரையிலும், லாடு ரகம் ஒரு கிலோ, 330 முதல், 335 ரூபாய் வரையிலும், கொட்டை பாக்கு ஒரு கிலோ, 170 ரூபாய் வரையிலும் விற்பனையானது.ஈரோடு, அந்தியூர், பனைமரத்துப்பட்டி, ஆட்டையாம்பட்டி, சங்ககிரி பகுதியை சேர்ந்த பாக்கு வியாபாரிகள் பாக்குகளை வாங்கிச் சென்றனர். கடந்த வாரத்தை விட, கிலோவுக்கு, பத்து ரூபாய் விலை குறைவாகவே கிடைத்தது.இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## பருப்பு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவு ஏற்படும்

நடப்பு, 2013 – 14ம் வேளாண் பருவத்தில், உள்நாட்டில் பருப்பு வகைகள் உற்பத்தி அதிகரித்து, தன்னிறைவு காணும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.நடப்பு கரீப் பருவத்தில், பருப்பு உற்பத்தி, 60.10 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இது, கடந்தாண்டின் இதே பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை (59.10 லட்சம் டன்) விட, 2 சதவீதம் அதிகமாக இருக்கும் என, இந்திய பருப்பு வகைகள் மற்றும் தானிய உற்பத்தி கூட்டமைப்பு மதிப்பிட்டுள்ளது.நாட்டின் பல பகுதிகளில், குறிப்பாக ராஜஸ்தான் உள்ளிட்ட சில மாநிலங்களில், பருவ மழை பொழிவு நன்கு உள்ளதுடன், சாதகமான ஈரப்பதம் நிலவுகிறது. இதனால், ரபி பருவத்திலும், இதன் உற்பத்தி, கடந்தாண்டின் இதே பருவத்தை விட, 5 – 10 சதவீதம் அதிகரிக்கும் என, இந்த கூட்டமைப்பின் துணைத் தலைவர் பிமல் கோத்தாரி தெரிவித்தார்.

**தேவை:** உள்நாட்டில், பருப்பு வகைகளுக்கான ஆண்டு தேவை, 2 கோடி டன் என்ற அளவில் உள்ளது. ஆனால், உள்நாட்டில், இவற்றின் உற்பத்தி குறைவாக உள்ளது. இருப்பினும், கடந்த ஒரு சில ஆண்டுகளாக இவற்றின் உற்பத்தி உயர்ந்து வருகிறது. குறிப்பாக, 2004 – 05 வேளாண் பருவத்தில் நாட்டின் பருப்பு வகைகள் உற்பத்தி 1.31கோடி டன்னாக இருந்தது. இது, 2012 – 13ம் பருவத்தில், 1.85 கோடி டன்னாக அதிகரித்து இருந்தது. தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு உற்பத்தி இல்லாததால், நம்நாடு, ெவளிநாடுகளிலிருந்து இவற்றை இறக்குமதி செய்து வருகிறது.

**சாகுபடி பரப்பளவு:**கரீப் பருவ சாகுபடி பரப்பளவு, கடந்தாண்டு, 88 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இது, நடப்பாண்டு, 1.02 கோடிஹெக்டேராக அதிகரித்துள்ளது. நாட்டின் மொத்த பருப்பு வகைகள் உற்பத்தியில், ரபி பருவத்தின் பங்களிப்பு, 70 சதவீத அளவிற்கு உள்ளது. ரபி பருவத்திலும், சாகுபடி பரப்பளவு, கடந்தாண்டை விட பன்மடங்கு அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, ஒட்டு மொத்த அளவில், நாட்டின் பருப்பு வகைகள் உற்பத்தி, 2 கோடி டன் அளவை எட்டும் என, வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையத்தின் தலைவர் அசோக் குலாட்டி தெரிவித்தார்.

**ஆதரவு விலை:**பருப்பு வகைகள் உற்பத்தி உயர்ந்து வருவதற்கு, மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிப்பும் முக்கிய காரணமாக உள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, மத்திய அரசு,

துவரை மற்றும் உளுந்திற்கான ஆதரவு விலையை, ஒரு குவிண்டால், 3,200 மற்றும் 3,300லிருந்து, 4,300 ரூபாயாக ஆக அதிகரித்தது.நடப்பாண்டில், ஒரு குவிண்டால், பாசிப் பருப்பின் விலையை, 3,500லிருந்து 4,500 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதனால், பல விவசாயிகள் பருப்பு வகைகள் சாகுபடியில்ஆர்வம் காட்டுவதுடன், இதன் பரப்பளவையும் உயர்த்தி வருகின்றனர்.இந்நிலையில், டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு சரிவடைந்துள்ளதால், பருப்பு வகைகள் இறக்குமதி குறைந்து போயுள்ளது என, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

**நடப்பு கணக்கு பற்றாக்குறை:** நாட்டின் நடப்பு கணக்கு பற்றாக்குறை அதிகரித்து வரும் சூழ்நிலையில், வேளாண் உற்பத்தி அதிகரித்து வருவது ஆறுதல் அளிப்பதாக உள்ளது.நடப்பு ஆண்டில், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், நெல், கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்களின் உற்பத்தி, புதிய உச்சத்தை எட்டும் என, மத்திய அரசின் முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு, நாட்டின் வேளாண் உற்பத்தி அதிகரிக்கும் சூழ்நிலையில், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் போன்றவற்றின் இறக்குமதி குறையும்.

இதனால், அன்னியச் செலாவணி வெளியேறுவது தடுக்கப்பட்டு, நடப்பு கணக்கு பற்றாக்குறை குறையும் என, ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**08.11.2013**

**வேளாண் விளைபொருள் சேமிப்பு 1.50 கோடி டன் இருப்பு வைக்கும் குளிர்சாதன கிடங்கு வசதி தேவை**



ஐதராபாத் : இந்தியாவில் காய்கறிகள் உள்பட வேளாண் விளை பொருட்கள் 1.50 கோடி டன் அளவுக்கு இருப்பு வைக்க குளிர்சாதன வசதியுடைய கிடங்குகள் தேவை. தனியார் துறையினர் முதலீடு செய்து இந்த தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்று மத்திய உணவு பதப்படுத்தும் துறை அமைச்சகத்தின் செயலாளர் சிராஜ் ஹுசைன் தெரிவித்தார்.

உலக வேளாண் அமைப்பின் சார்பில் ஐதாராபாத்தில் 3 நாள் மாநாடு நடைபெறுகிறது. நேற்று முன்தினம் துவங்கிய மாநாட்டின் ஒருபகுதியாக, Ôஉணவு 360Õ என்ற 2 நாள் சர்வதேச கருத்தரங்கம் மற்றும் வேளாண் விளைபொருள், உணவு பதப்படுத்துதல் கண்காட்சி நேற்று தொடங்கியது.

இதில் பங்கேற்க வந்த மத்திய உணவு பதப்படுத்தும் துறை அமைச்சகத்தின் செயலாளர் சிராஜ் ஹுசைன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: 2010ம் ஆண்டு நிலவரப்படி, நாட்டில் சுமார் 25 மில்லியன் டன் அளவுக்கு வேளாண் விளைபொருட்களை இருப்பு வைக்க குளிர்சாதன கிடங்குகள்

வசதி உள்ளது. ஆனால், சுமார் 61 மில்லியன் டன்கள் அளவுக்கு இருப்பு வைக்கும் குளிர்சாதன வசதி கிடங்குகள் தேவை. எனவே இரண்டுக்கும் வித்தியாசம் 36 மில்லியன் டன்கள்.

கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 10 மில்லியன் டன்கள் அளவுக்கு இருப்பு வைக்கும் கிடங்குகள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே தற்போதைய தேவை 26 மில்லியன் டன்கள் இருப்பு வைக்கும் வசதியுடைய குளிர்சாதன கிடங்குகள்தான். தேவையை கணக்கிட்ட முறையில் ஏற்பட்டுள்ள குறைபாடு காரணமாக உண்மை தேவை சுமார் 15 மில்லியன் டன்கள் இருப்பு வைக்கக்கூடிய கிடங்குகள்தான்.

இந்தத் துறையில் அரசின் மானிய உதவியை எதிர்பார்க்காமல், தனியார் அதிக அளவில் முதலீடு செய்து குளிர்சாதன வசதியுடைய கிடங்குகளை அமைக்க வேண்டும்.
அப்படி உருவாக்கிவிட்டால், நாட்டில் வேளாண் விளைபொருட்கள் இருப்பு வைக்க சிறந்த நெட்வொர்க் கிடைத்துவிடும். வேளாண் விளைபொருட்கள் விலை உயர்வை கட்டுப்படுத்துவதோடு, விவசாயிகளுக்கும், இந்தத் தொழிலில் ஈடுபடுவோருக்கும் நியாயமான வருமானம் கிடைக்கும்.

மாநிலங்களுக்கு இடையே தொழிற்சாலை உற்பத்தி பொருட்கள் கொண்டு செல்ல கட்டுப்பாடுகள் இல்லாதததது போல், வேளாண் விளைபொருட்களையும் கொண்டு செல்ல கட்டுப்பாடுகள் இருக்காது. விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது என்றும் தெரிவித்தார்.

**கோயம்பேடு மார்க்கெட்டில் வரத்து குறைந்ததால் காய்கறி விலை எகிறியது**



சென்னை : கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால் காய்கறி விலை உயர்ந்துள்ளது. சாம்பார் வெங்காயம் கிலோ ரூ.80க்கும் முருங்கைக்காய் ரூ.70க்கும் விற்கப்படுகிறது. உடுமலைப்பேட்டை, கிருஷ்ணகிரி, தேனி, ஆந்திர மாநிலத்தின் ஒட்டிபள்ளி, பழமனேரி, புங்க லூர், கர்நாடக மாநிலம் சீனிவாச புரம், கோலார், ஹாசன் ஆகிய இடங்களில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தக்காளி வந்து சேர்கிறது.

60 லாரிகளில் வந்த தக்காளி, தற்போது 50 லாரிகளில் மட்டுமே வருகிறது. இதனால்  விலை அதிகரித்துள்ளது. ரூ.25க்கு விற்ற தக்காளி தற்போது ரூ. 30 முதல் ரூ. 40க்கு விற்கப்படுகிறது. தாராபுரம், பெரம்பலூர், ஒட்டன்சத்திரம், தேனி, திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயம் (சாம்பார் வெங்காயம்) வந்து சேர்கிறது. 15 லாரிகளில் வந்து கொண்டிருந்த வெங்காயம் ஒரு கிலோ ரூ.45க்கு விற்கப்பட்டது. தற்போது 8 லாரிகளில் மட்டுமே வருவதால் ஒரு கிலோ ரூ.80 வரை விற்கப்படுகிறது.

ஒட்டன்சத்திரம், தாராபுரம், தேனி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து முருங்கைக்காய்கள் 20 லாரிகளில் வந்து கிலோ ரூ.30க்கு விற்கப்பட்டது. தற்போது 10 லாரிகளில் மட்டுமே வருவதால் கிலோ ரூ.70க்கு விற்கப்படுகிறது.

ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களில் இருந்து 70 லாரிகளில் வந்த பெரிய வெங்காயம் ஒரு கிலோ ரூ.35க்கு விற்பனையானது. தற்போது 50 லாரிகளில் மட்டுமே வருவதால் ஆந்திர வெங்காயம் ரூ. 40, கர்நாடக வெங்காயம் ரூ. 50, மகாராஷ்ட்டிரா வெங்காயம் ரூ.60க்கு விற்கப்படுகிறது.

எக்ஸ்ட்ரா தகவல்

ஆசியாவிலேயே மிகப்பெரிய வெங்காயம் மொத்த விற்பனை சந்தை, மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள லாசல்கானில் உள்ளது.

**டிராக்டர் வாடகை உயர்வால் விவசாயிகள் அவதி**

மானாமதுரை, : டீசல் விலை உயர்வால் டிராக்டர்களின் உழவுக்கான வாடகை கூலியும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். மாவட்டம் முழுவதும் கடந்த ஆண்டு சரியான அளவு மழை பெய்யவில்லை. இதனால் எவ்வித விவசாயமும் செய்யாமல் சுமார் 90 ஆயிரம் ஹெக்டேர் நிலங்கள் தரிசாக கிடந்தன. இந்நிலையில் வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் 20ம் தேதி முதல் துவங்கியது. கடந்த 2 வாரங்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளதால் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4,813 கண்மாய்களில் 40 சதவீதம் தண்ணீர் நிரம்பியுள்ளது.

மானாமதுரை, கட்டிக்குளம், மாங்குளம், கீழப்பசலை, அன்னவாசல், சின்னக்கண்ணனூர், தெ.புதுக்கோட்டை, கீழப்பிடாவூர் உள்ளிட்ட சுற்றியுள்ள 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் 2,500க்கும் அதிகமான ஏக்கர்களில் நெல் சாகுபடி பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர். நிலத்தை உழுவதற்கான டிராக்டர்களின் வாடகை திடீரென உயர்த்தப்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பெட்ரோல், டீசல் மீதான விலை கட்டுப்பாட்டை மத்திய அரசு கைவிட்டதால் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் சர்வதேச கச்சா எண்ணெய் விலை நிலவரத்துக்கு ஏற்ற வகையில் அவ்வப்போது விலையை உயர்த்தி வருகின்றன. கடந்த ஓராண்டில் 14 முறை டீசல் விலை உயர்த்தப்பட்டதன் மூலம் லிட்டருக்கு, 11.20 காசுகள் உயர்ந்துள்ளது. விலை ஏற்றத்தின் எதிரொலியாக உழவுப்பணிகளில் ஈடுபடும் டிராக்டர்களின் வாடகைகட்டணமும் உயர்த்தப்பட்டுள் ளது.

**கோவை வேளாண் பல்கலை. சார்பில் பயிர்களை வறட்சியில் இருந்து பாதுகாக்க நுண்ணுயிர் கண்டுபிடிப்பு**

காரைக்குடி, : வறட்சியில் இருந்து பயிர்களை பாதுகாக்கும் வகையில் கோவை வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் புதிய நுண்ணுயிர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நுண்ணுயிர் துறை தலைவர் குணசேகரன் தெரிவித்தார்.

காரைக்குடி அருகே செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலையத்தில் பிபிஎப்எம் திரவ நுண்ணுயிர் உரம் குறித்து வேளாண் அதிகாரிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. பேராசிரியர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார். ஆராயச்சி மைய தலைவர் சுவாமிநாதன் துவக்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசுகையில், ‘செட்டிநாடு மானாவாரி ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து செயல் விளக்கங்களும் அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த ஆராய்ச்சி மையத்தில் நெல், சோளம், கம்பு, குதிரைவாலி, உளுந்து, பாசிப்பயறு, தட்டைபயிறு, அவரை, கொத்தவரங்காய், கடலை, ஆமணக்கு உள்பட பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. தவிர பசுந்தாள் இயற்கை உரம் குறித்து செயல்முறையும் உள்ளது. இதனை விவசாயிகள் நேரில் வந்து பார்வையிடலாம்’ என்றார்.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக நுண்ணுயிர் துறை தலைவர் குணசேகரன் பேசுகையில், ‘கோவை வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் பயிர்களை வறட்சியில் இருந்து பாதுகாக்க கூடிய நுண்ணுயிர் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி கடந்த 10 ஆண்டுக்களுக்கும் மேலாக நடத்தப்பட்டது. தற்போது மெத்தைலோ பாக்டீரியம் திரவ நுண்ணுயிர் உரம்(பிபிஎப்எம்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தக்காளி, பருத்தியில் தெளித்து சோதனை செய்யப்பட்டது. முதல்முறையாக கடந்த 2012-13ம் ஆண்டில் காவிரி டெல்டா பகுதிகளில் வறட்சி ஏற்பட்டபோது 1.25 லட்சம் ஏக்கர் நெற்பயிரில் 25 ஆயிரம் லிட்டர் தெளிக்கப்பட்டது. இதன்மூலம் 15 நாட்கள் வறட்சியில் இருந்து பயிர்கள் காக்கப்பட்டன.

இந்த நுண்ணுயிர் இலைவழி திரவ நுண்ணுயிர் உரமாக பயன்படுகிறது. இவைகள்

விதைகள் முளைக்கவும் ஏதுவாக உள்ளது. மேலும் செடிகளின் வளர்ச்சி ஊக்கிகளை, இலை செல்கள் மேற்பரப்பிலும் மற்றும் செடியின் பிறபாகங்களின் உள்ளேயும் உற்பத்தி செய்து, செடிகளின் வளர்ச்சியை நன்கு ஊக்குவிக்கிறது. தற்போது சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் 5,000 ஏக்கரில் இந்த திரவ நுண்ணுயிர் உரம் சோதனை அடிப்படையில் இலவசமாக தெளிக்கப்பட உள்ளது. இதற்காக மத்திய அரசு ரூ.55 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. இந்த மாவட்டங்களில் இந்த சோதனை வெற்றி பெறும் பட்சத்தில் இந்தியா முழுவதும் வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் வறட்சியான நிலங்களில் தெளிக்கப்பட உள்ளது. விதைகளை திரவ பிபிஎப்எம்-ல் ஊற வைத்து நட்டால் முளைப்புத்திறன், நாற்றுகளின் வளர்ச்சி அதிகரிக்கிறது. ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளுடன் கலந்து தெளிக்ககூடாது. ரசாயன உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்து தெளிப்பதற்கு 7 - 10 நாட்களுக்கு முன்போ அல்லது பின்போ இதனை பயன்படுத்தலாம். கோவை, மதுரை வேளாண் பல்கலைக்கழகத்தில் மட்டும் இந்த திரவ நுண்ணுயிர் கிடைக்கும். இதன் விலை ஒரு லிட்டர் ரூ.300' என்றார்.

நிகழ்ச்சியில் மதுரை வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் கோபால், வேளாண் இணை
இயக்குநர் செல்லத்துரை, துணை இயக்குநர் சங்கர், பேராசிரியர் சுந்தர், உதவி பேராசிரியர்கள் கண்ணன், கதிர்வேலன், பரமசிவம் உள்பட பலர் கலந்து கொண்டனர். பேராசிரியர் முத்துராமன் நன்றி கூறினார்.

**உச்சி வெயில் நேரத்தில் பூச்சி மருந்து அடிக்கலாமா? அதிகாரிகள் ஆலோசனை**

திருப்புவனம், : 'பயிர்களுக்கு உச்சி வெயில் நேரத்தில் பூச்சி மருந்தடிக்கக்கூடாது' என வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

நெல் நடவுமுறைகள் மற்றும் பூச்சி மருந்து தெளிக்கும் முறைகள் குறித்து வேளாண் அதிகாரிகளின் ஆலோசனைகள் :

நெல் நாற்று 14 நாட்கள் பருவத்தில் இருக்கும் போது 22.5 செமீ இடைவெளியில்

நடவு செய்தால், 60 முதல் 80 வரை அதிக சிம்புகள் உருவாகும். இதனால் உற்பத்தி அதிகரிக்கும். மண் மாதிரி சேகரம் செய்து அதனை ஆய்வுக்கு அனுப்பி அதன் அடிப்படையில் உரமிட்டால் செலவு குறைய வாய்ப்புள்ளது. நெல் பயிரில் பூச்சி, நோய் மற்றும் களைகளை கட்டுப்படுத்த வயல்களில் தெளிப்பான் கொண்டு பாதுகாப்பான முறையில் மருந்து தெளிக்கும் வழிமுறைகளை கடைபிடிக்கவேண்டும்.

ஒரு ஏக்கருக்கு சிபாரிசு செய்யப்படும் மருந்தின் அளவை சரியாக பயன்படுத்தவேண்டும். ஏக்கருக்கு கைத்தெளிப்பானாக இருந்தால் 200 லிட்டர் தண்ணீரிலும் (16 லிட்டர் கொள்ளளவு கொண்ட கைத்தெளிப்பானுக்கு பனிªரண்டரை டாங்க்) விசைத் தெளிப்பானாக இருந்தால் 60 லிட்டர் தண்ணீரிலும் (10 லிட்டர் கொள்ளளவு கொண்ட விசைத் தெளிப்பானுக்கு 6 டாங்க்) சிபாரிசு செய்யப்பட்ட மருந்தினை கலந்து தெளிக்கவேண்டும்.

மருந்தின் அளவை சரியாக வைத்து தண்ணீர் அளவினை குறைத்தால் மருந்தின் அடர்த்தி அதிகமாவதால், மருந்தடித்தும் சாகாத பூச்சிகள் எதிர்ப்பு சக்தியுடன் கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகும். அதிக அடர்த்தியுடன் மருந்து தெளிக்கும்போது அதிக விஷத்தன்மையினால் மருந்து தெளிப்பவருக்கு மயக்கமோ, வாந்தியோ ஏற்பட வாய்ப்பு உண்டு.

மருந்து தெளிக்கும் போது காற்றின் எதிர் திசையில் தெளிக்கக்கூடாது. உச்சி வெயில் நேரத்தில் தெளிக்கக்கூடாது. மருந்து தெளிப்பவர் கண்ணாடி அணிவதுடன் மூக்கு கவசம் அல்லது துணியினை மூக்கில் கட்டி, கை உறை அணிந்து தெளிக்க வேண்டும். மருந்து தெளிக்கும் நேரத்தில் புகைபிடிக்கவோ, மது அருந்தவோ கூடாது. குடிதண்ணீரை பாதுகாப்பாக வைத்து குடிக்கவேண்டும். இடையில் உணவு சாப்பிட செல்லும் போது கை, கால், முகம் ஆகியவற்றை சோப்பு போட்டு கழுவவேண்

டும்.மருந்து தெளித்து முடித்தவுடன் மருந்து டப்பாக்களை குழி தோண்டி புதைக்கவேண்டும். மறு பயன்பாடு செய்யக்கூடாது. மருந்து தெளிப்பவருக்கு மயக்கமோ, வாந்தியோ ஏற்பட்டால் உடனடியாக டாக்டரை அணுகுவதுடன்,

பயன்படுத்திய பூச்சி மருந்தினையும் டாக்டரிடம் காண்பித்து அதற்கேற்ப சிகிச்சை பெற வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

**பருவமழை மாற்றத்தால் கீரை வரத்து அதிகரிப்பு களைகட்டுகிறது விற்பனை**

திண்டுக்கல், : மழை சீசன் துவங்கியுள்ளதை தொடர்ந்து திண்டுக்கல்லிற்கு கீரை வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. இதனால் நகரின் பல பகுதிகளில் ரோட்டோரங்களில் கீரை விற்பனை களைகட்டி வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை கடந்த சில நாட்களாக பெய்து வருகிறது. கடந்த மாதமே துவங்க வேண்டிய பருவநிலை சற்று தாமதமாக துவங்கியுள்ளது. இருப்பினும் அவ்வப்போது மழை சிறிது இடைவெளியுடன் பெய்து கொண்டே இருக்கிறது. இதனால் கடந்த வாரம் 34 டிகிரி செண்டிகிரேட்டில் இருந்த வெப்பநிலை படிப்படியாக குறைந்து நேற்று 30ஐ தொட்டுள்ளது. குளிர்ந்த காற்றுடன் கூடிய ஈரப்பதமான பருவநிலை பயிர் வளர்ச்சிக்கு ஏற்றதாக உள்ளது. குறிப்பாக கீரை வளர்ச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அதிகரித்துள்ளது.

மனித முயற்சி இல்லாமல், உரம், பராமரிப்பு, பூச்சிக்கொல்லி உள்ளிட்ட எந்த தேவையும் இன்றி தானாகவே வளரும் தன்மை கொண்டதால் ஆங்காங்கே தரிசு நிலங்களில் இவை அதிகளவு விளைந்துள்ளது. விவசாயிகளும், வியாபாரிகளும் இவற்றை பறித்து விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். இதனால் திண்டுக்கல்லில் கீரை வரத்து அதிகரித்துள்ளது.

உழவர்சந்தைக்கு வழக்கமாக 300 கிலோ வரும் கீரைகள் நேற்று 450 கிலோவாக அதிகரித்தது. மேலும் காந்தி மார்க்கெட், நாகல்நகர் சந்தை மார்க்கெட்டிலும் கீரை வரத்து அதிகரித்துள்ளது.

சிறு வியாபாரிகள் காட்டாஸ்பத்திரி, வடக்கு போலீஸ் ஸ்டேஷன் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகம் கடந்து செல்லும் பகுதிகளில் பாதையோரம் அமர்ந்து கீரைகளை விற்பனை செய்து வருகின்றனர். ஒரு கட்டு ரூ.10க்கு விற்கப்படுகிறது. அரைக்கீரை, மிளகுதக்காளி, சிறுகீரை, தண்டுக்கீரை, பொன்னாங்கண்ணி, சிவப்பு பொன்னாங்கண்ணி, வெந்தயக்கீரை, புளிச்சகீரை, அகத்திக்கீரை உள்ளிட்ட வகை

வகையான கீரைகள் மலிவு விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பல்வேறு மருத்துவ குணம் கொண்ட இந்த கீரைகள் உடலுக்கு ஏராளமான ஆற்றலை வழங்குவதால் பொதுமக்கள் ஆர்வமுடன் இவற்றை வாங்கி செல்கின்றனர்.

**பழநி பகுதியில் தொடர் மழை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

பழநி, : பழநி பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பழநி பகுதியில் கடந்த 2 நாட்களாக தொடர் கனமழை பெய்து வருகிறது. இம்மழையால் பழநி பகுதிக்கு குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு ஆதாரமாக விளங்கும் அணைகளுக்கு நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. இதன்படி நேற்று காலை நிலவரப்படி 65 அடி உயரம் உள்ள பாலாறு-பொருந்தலாறு அணையின் நீர்மட் டம் 35.40 அடியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு 54 கனஅடி நீர் வருகிறது. அணையில் இருந்து விநாடிக்கு 7 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணைப்பகுதி மழையளவு 37 மில்லிமீட்டராக பதிவாகி உள்ளது. 67 அடி உயரம் உள்ள வரதமாநதி அணையின் நீர்மட்டம் 56.63 அடியாக உள் ளது. அணைக்கு விநாடிக்கு 20 கனஅடி நீர் வருகிறது. அணையில் இருந்து 10 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணைப்பகுதி மழையளவு 17 மில்லிமீட்டராக பதிவாகி உள்ளது. 80 உயரம் உள்ள குதிரையாறு அணையின் நீர்மட்டம் 46.85 அடியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு 46 கனஅடி நீர் வருகிறது. அணையில் இருந்து 03 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணைப்பகுதி மழையளவு 10 மில்லிமீட்டராக பதிவாகி உள்ளது.
நேற்றும் பழநி நகரில் கனமழை பெய்தது. இதனால் பழநி கோயிலுக்கு வந்த பக்தர்கள் கடும் அவதியடைந்தனர். மழையில் நனைந்தபடியே சுவாமி தரிசனம் செய்ய சென்றனர். காலை முதலே மழை பெய்த காரணத்தினால் பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மா ணவ-மாணவிகள் மற்றும் வேலைக்கு செல்வோர் மழையில் நனைந்தபடியே சென்றுவர நேரிட்டது. சாலைகளில் உள்ள பள்ளங்களில் மழைநீர் தேங்கியதால் இருசக்கர வாகன ஓட்டிகள் கடும் அவதியடைந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 08.11.2013

### 270 ஹெக்டேரில் துவரை நடவு சாகுபடி செய்ய திட்டம்

சிவகங்கை மாவட்டத்தில் பயறு உற்பத்தியை அதி கரிக்க புதிய தொழில் நுட் பத்தில் துவரை சாகுபடி செய்யப்பட உள்ளது. இதற்கு ஹெக் டேருக்கு 7 ஆயிரத்து 500 மானியம் வழங்கப் படுகிறது.

<u>துவரை சாகுபடி</u>

சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக்கு னர் செல்லத்துரை விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதா வது:-

பயறு வகை பயிர் சாகு படியை அதிகரிக்கும் நோக்கத் தில் துவரை சாகுபடியில் விதை களை நேரடியாக நிலத் தில் விதைப்பதற்கு பதிலாக நாற்றுக்களாக வளர்த்து நடவு செய்யும் புதிய தொழில் நுட்பம் வேளாண்மைதுறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்தில் 270 ஹெக்டேரில் துவரை நடவு சாகுபடி செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது.

இதற்காக ஒரு ஹெக்டேருக்கு ரூ.7ஆயிரத்து 500 மானியமாக அளிக்கப்பட உள்ளது. இதில் அதிக நாட்கள் வயதுடைய உயர்விளைச்சல் தரும் மலட்டு, தேமல் நோய்க்கு எதிர்ப்பு சக்தி உடைய ரகங்கள் சாகுபடி செய்ய வேண்டும். ஒரு ஏக்க ருக்கு ஒருகிலோ போதுமான தாகும்.

பாலித்தீன் பைகளில் தொழு உரம், மணல் கலந்த கலவையை நிரப்பி பூஞ்சான மருந்து மற்றும் ரைசோபியம் விதை நேர்த்தி செய்த விதைகளை ஒரு பைக்கு 2 விதை வீதம் விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2 ஆயிரத்து 500 பைகள் தேவைப்படும்.

<u>800 கிலோ மகசூல்</u>

விதைத்த 25 நாளில் இருந்து 30 நாட்கள் நாற்றுக்களை வளர்க்க வேண்டும். பின்னர் 6 அடி இடைவெளியில் ஆழசால் எடுத்து 2 அடி இடைவெளிவிட்டு நடவு செய்ய வேண்டும். இந்த முறையினை அந்தந்த வட்டார வேளாண்மை அதிகாரிகளை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

இந்த முறையில் நடவு செய் யப்படும் துவரை செடியில் ஒரு ஏக்கருக்கு 800 கிலோ வரை மகசூல் பெறலாம். தற் போது பெய்துவரும் பருவ மழையை பயன்படுத்தி விவசா யிகள் துவரை நடவு செய்ய லாம். எனவே விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்கு னர் களை தொடர்பு கொண்டு மானியத்துடன் கூடிய இந்த புதிய தொழில் நுட்ப முறையில் துவரை நடவு செய்து பயன் பெறலாம்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

**சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யவில்லை**

போளூர் பகுதி விவசாயி களுக்கு சர்க்கரை ஆலை நிர் வாகம் பணம் பட்டு வாடா செய்ய வில்லை என்று குறை தீர்வு கூட் டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

<u>குறைதீர்வு கூட்டம்</u>

போளூர் தாலுகா அலுவ லகத்தில் விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் மாவட்ட வினி யோக அதிகாரி கிருபா னந்தம் தலைமையில் நடை பெற்றது. தாசில்தார் ஜி.கிருஷ்ண மூர்த்தி முன்னிலை வகித் தார். துணை தாசில்தார் சுந்தரமூர்த்தி வரவேற்றார். கூட்டத்தில் குருவன் சுப்பி ரமணி, மணிலிங்கம், கோபி, ராமசாமி உள்ளிட்ட விவசாயி கள் பலர் கலந்து கொண்டு பேசினார்கள்.

அவர்கள் பேசுகையில் கூறி யதாவது:-

<u>பட்டுவாடா செய்யவில்லை</u>

மங்களாபுரம், படவேடு பகுதிகளில் அடிக்கடி மின்சா ரம் தடைபடுகிறது. மின்வாரிய அதிகாரிகள் குடியிருப்பில் தங்குவதே இல்லை. தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ய வில்லை.

போளூர் அரசு ஆஸ்பத்திரி யில் மருந்து மாத்திரைகள் சரிவர வழங்குவதில்லை. 3 பேஸ் மின் இணைப்பு பெற அதிகாரிகள் லஞ்சம் கேட்கி றார்கள். பெரியகரம் கிரா மத்தில் சமுதாய கூடம் பழுத டைந்து உள்ளது.

**குரங்கு தொல்லை**

வசூரில் குரங்குகள் தொல்லை தினசரி அதிகரித்து வருகிறது. குரங்குகளால் பயிர் கள் நாசமாகிறது. வீட்டில் உள்ள பொருட்களை குரங்கு கள் தூக்கி செல்கின்றன. பள்ளி குழந்தைகளிடம் இருந்து பொருட் களை பறித்து செல்கிறது. பலரை கடித்தும் உள்ளன.மேற்கண்டவாறு விவசாயி கள் பேசினர்.

முடிவில் உதவியாளர் மனோகரன் நன்றி கூறினார்.